

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (1.1.2025) முகாம் அலுவலகத்தில், ஆங்கிலப் புத்தாண்டையொட்டி கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் துணை முதலமைச்சர் பிறந்தநாள் விழா!

## 40 அடி உயர கொடிக் கம்பத்தில் கழகக் கொடியேற்றி தூய்மைப் பணியாளர்களுக்கு நல உதவிகள்!

சென்னை, ஜன.2-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, ஜனவரி 1 புத்தாண்டு தினத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம், வடபெரும்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள், குடிநீர் வடிகால் வாரிய ஊழியர்கள், மின் துறை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் என சுமார் 200க்கும் மேற்பட்டவர்களுக்கு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு,பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், தூய்மை பணியாளர்களுக்கு சேலைகள், மதிய உணவு, மளிகை சாமான்கள் உள்ளிட்ட பொருட்களை, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார். மேலும் முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் உருவம் பொறித்த நாள்காட்டியும் தூய்மை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

முன்னதாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, சுமார் 40 அடி உயர கொடிக் கம்பத்தில் இரு வண்ணக் கொடியை பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்றி வைத்தார். மேலும் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவப்படங்களுக்கும் பொதுமக்களும், கழகத்தினரும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் வட்டக்கழக நிர்வாகிகள் சி. மூர்த்தி, சி.பாலாஜி, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார், கே. சண்முகப்பிரியன், டி. வினோத்,கே. ராஜ்குமார், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், பாக முகவர்கள் டி. திவாகர்,என். நாகராஜன், வி. சுமிர், கார்த்திக், வடபெரும்பாக்கம் எம்,மைக்கேல்,பி. செந்தில், இ. கார்த்திக், எஸ். தினேஷ், எஸ். சசிகுமார், டி. மாதவன், வழக்கறிஞர் எம். என் தளபதி, தீயம்பாக்கம் இ. சுதர்சன், ஜான்சன், ஜி. பூபாலன், கௌதம், ரஞ்சன், ராகுல், ஜனா, பிரசாந்த், காந்திநகர் சுந்தரம், கொசப்பூர் விஜயன், கொசப்பூர் இரண்டாம் பகுதி முனுசாமி, சதீஷ், அரியலூர் எஸ். நாகராஜ், ஆனந்த், தசரதன், சின்னத்தோப்பு முனிவேல், கமலநாதன், செல்வம், ஏ. பாலகிருஷ்ணன், மயிலன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நலத்திட்ட உதவிகளை பெற்றுக் கொண்ட தூய்மை பணியாளர்களும், மாநகராட்சி ஊழியர்களும் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.





